[illegible]: வாழப்பிறந்தோம் : கி. வா. ஜ.:

" வெறும் புத்தகப் படிப்பால் அறிவு பெருகிவிடாது. வெறும் வாழ்க்கை அநுபவத்தால் அறிவு பெருகிவிடாது. இரண்டும் சேர்ந்து உண்டாகிற அறிவுதான் வாழ்க்கையில் வெற்றி பெறச் சரியாய் உதவும். ***

" இயற்கையாய் ஒருவன் உண்மையான அறிவு படைத்திருக்கலாம். அநுபவ அறிவும் பெற்றிருக்கலாம். இந்த அறிவை வேண்டிய போது, வேண்டிய சந்தர்ப்பத்தில் சரியாய்ப் பயன்படுத்த அவனுக்குத் தெரிந்தால்தான் இரண்டும் பிரயோசனப்படும். வெறும் திறமை மட்டும் போதாது. திறமையைச் சரியாய் உபயோகிக்கத் தெரிந்திருக்க வேண்டும். இதற்கு மனப்பயிற்சி முக்கியம்.

" மேலோட்டமாய், கண்டும் காணாமல் இருந்துவிடுவதால் அநேக அரிய வாய்ப்புகளை நாம் கவனிக்கத் தவறிவிடுகிறோம். அதனால், நமது அறிவு பெருகுவதற்கேற்ற பல சந்தர்ப்பங்கள் வீணாகின்றன. கண்ணால் காண்பது, காதால் கேட்பது, மூக்கால் உணர்வது ~~[illegible]~~ வாயால் சுவைப்பது, மெய்யால் உணர்வது ஆகிய ஐந்து வகையால் நமக்குக் கிடைக்கிற அறிவு அனைத்தையும் பகுத்தறிவு என்ற ஆறாவது அறிவுப் பட்டறையில் போட்டு அடித்துச் செம்மைப்படுத்தி, மூளை என்கிற பண்டகசாலையில் ஒழுங்காய்ப் பிரித்து வைத்துக் கொள்ள வேண்டும்." ***

" வெறும் படிப்பாளியை அநுபவசாலிகள் மதிக்கமாட்டார்கள்; வெறும் அநுபவசாலியைப் படிப்பாளி

" வெறும் படிப்பாளியை அநுபவசாலிகள் மதிக்கமாட்டார்கள்; வெறும் அநுபவசாலிகளைப் படிப்பாளிகள் மதிக்கமாட்டார்கள்." ***

" நான் ஒரு பெரிய ஆளாக ஆகவேண்டும், மகத்தான காரியங்களைச் செய்து முடித்துவிட வேண்டும் — என்ற ஆசை எல்லோருடைய உள்ளத்திலேயும் இருந்து கொண்டே இருக்கிறது. இந்த ஆசையை அடக்கி நசுக்கி விடாதீர்கள். ஆசை நிறைவேற நல்லபடியாய் முயலுங்கள். ***

"அறிவுக்கு எல்லை இல்லை; அறிவு பெருகப் பெருக, அறிவுப்பசி இன்னும் அதிகரித்துக் கொண்டே போகும். ***

" கல்விதான் முக்கியமானது; அதன் மேலும் பெறுகிற அறிவுதான் அதிகம். கண்ணால் கண்டதை ஒவ்வொரு பொழுதில் எண்ணமே மனதில் பதிந்துக் கொண்டு வருகிற திறமையை இடைவிடாத பயிற்சியால் கைவரப் பெற — பெற்றுக் கொள்ள வேண்டும்." ***

"தங்களைப் பிராணியாய், ஆளை அண்டாமல் தனித்து வாழ்கிற பழக்கம் கெடுதலானது. நாம் மற்றவர்களோடு கலந்து கொண்டு தெளிவுபடுத்துவதுதான் சிந்தனையின் தொடக்கம். மனிதர் ஒருவரோடு ஒருவர் பழகிப் பேசுவதால், அறிவு பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்படுகிறது. அறிவுத் தெளிவும் வளர்ச்சியும் ஏற்படுகின்றன. பற்பல மனிதர்களோடு பழகுகிறவர்களுடைய தன்னம்பிக்கையும் துணிச்சலும் கூடுவது அதனால்தான். பலதரப்பட்ட ஜனங்களோடு பழகுவதனால்தான் உலகப் போக்கும் புரிபடும். உலகப் போக்கைப் புரிந்துகொண்டால்தான் வாழ்க்கையில் முன்னேற முடியும்." ***

" மேலெழுந்த வாரியாகப் புத்தகங்களைப் படித்துத் தள்ளுவது பயன் தராது. படித்ததைத் தெளிவுபடுத்திக் கொண்டு, படிப்பறிவை வேறு சேர்ந்த அறிவாக ஆக்கிக் கொண்டுவிட வேண்டும்" ***